<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS.NO.**52/2020

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 10.03.2026

**Dw1 (சுந்தராம்பாள்)**

**<u>குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)</u>**

வாதி இந்த வழக்கை தாக்கல் செய்த பின் தான் அவ 59/2020 வழக்கை நாங்கள் தாக்கல் செய்தோம். அவ 52/2020 அழைப்பாணை பெற்ற பின் வழக்கு விவரங்கள் தெரிந்த பின் தான் அவ 59/2020 தாக்கல் செய்யப்பட்டது. துளசிமணி யார் யாருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எதிர்வழக்குரை நான் தான் தாக்கல் செய்தேன். சந்திராமணி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளாரா என்றால இல்லை. எதிர்வழக்குரை விவரங்களை நான் தான் சொன்னேன். 1ம் பிரதிவாதி சந்திராமணி உடனிருந்தாரா என்றால் இல்லை. 1ம் பிரதவாதி சந்திராமணியை எப்போது நான் கடைசியாக பார்த்தேன் என்றால சொத்தை கிரயம பெற்ற தேதியில் பார்த்தேன், அதன் பின் பார்க்கவில்லை. சென்ற விசாரணை தேதியில் சந்திராமணி நீதிமன்றத்திற்கு வந்திருந்தார் என்றால் இல்லை. சந்திராமணி ஈரோட்டில் குடியிருக்கிறார். சந்திராமணிக்கு தாவா சொத்திற்கு அருகே இதர சொத்துக்கள் உள்ளது, அவற்றை அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. தாவா சொத்திற்கு அருகில் உள்ள சந்திரமணிக்கு பாத்தியப்பட்ட சொத்தை யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால் யாரும் அதை அனுபவம் செய்வதில்லை. சந்திராமணிக்கு இதர சொத்து எவ்வளவு உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் சந்திராமணியின் பூர்வீக சொத்துக்கள் என்றால் இல்லை. சொத்துக்கள் எவ்வாறு சந்திராமணிக்கு பாத்தியப்பட்டது என்றால் சந்திராமணியின் தகப்பனார் கிரயம் மூலம் பெற்ற சொத்துக்கள். அதற்கான ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றார் பார்க்கவில்லை. நான் பெற்ற கிரய ஆவணத்தில் சொத்துக்கள் சந்திராமணியின்

தகப்பனார் வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சந்திராமணி நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி சொல்லும் நிலையில் உள்ளார் என்றால் இல்லை, அவர் உடல்நிலை சரியில்லை என கேள்விபட்டேன். சந்திராமணிக்கு தான் சொத்துக்கள் எவ்வாறு பாத்தியம் என்று தெரியும் என்றால் சந்திராமணி தன் தகப்பனாருக்கு சொத்துக்கள் பாத்தியம் என சொன்னதாக கூறுகிறார். நான் கிரயம் பெற்றபோது மூல பத்திரங்கள் ஏதாவது பெற்றேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பெற்ற கிரய ஆவணம் நீங்கலாக வேறு மூல ஆவணங்கள் வைத்துள்ளேனா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. வாதி, 1 ம் பிரதிவாதி அவருடைய தகப்பனாருடன் சேர்ந்து சுமார் 4 ஏக்கர் நிலம் விற்பனை செய்துள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் குடும்பத்திற்கு மீதம் எவ்வளவு சொத்து உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. 31.01.2013 தேதிய (பிசாஆ 3) பாகக் கறார் ஆவணத்தின் அசல் வாதியிடம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. சந்திராமணியின் தாயார் 2004 ல் இறந்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சந்திராமணியின் தகப்பனார் 2016 ல் இறந்தார் என்றால எனக்கு தெரியாது. சந்திராமணியின் கணவர் இறந்து சுமார் 15 ஆண்டுகள் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சந்திராமணி ஈரோட்டில் இருப்பதால் வாதி தான் சொத்தை பராமரித்து வந்தார் என்றால் வாதியும் சந்திராமணியும் பராமரித்து வந்தனர். நான் கிரயம் பெற்ற சொத்தை செக்குபந்தி கண்டு தான் கிரயம் பெற்றேன். பொதுவில் கிரயம் பெறவில்லை. நான் தென்வடக்கில் அனுபவித்து வருவதாக சொல்கிறேன்.

( குறுக்கு விசாரணை தொடர்ச்சி வாதி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.03.10 16:55:40 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS